RPAD

நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் (பொ) சிவகங்கை அவர்களின் நடவடிக்கைகள்.

முன்னிலை: திருமதி.இரா. காவியம், டி.சி.இ.,

ந.க.எண்:2343/2017/சிம-3

நாள்:03.10.2018

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவுகள், மனைகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம்-2017 - நகர் ஊரமைப்பு - சிவகங்கை மண்டலம் - புதுக்கோட்டை மாவட்டம் - திருமயம் வட்டம்/ஊராட்சி ஒன்றியம் - அரசம்பட்டி ஊராட்சி – திருமயம் கிராமம் - சர்வே எண்:64/1A1,1B1-இல் 36700.00சமீ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள (சுப்பு கார்டன்) அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை எண்:78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நவ4(3) நாள்:04.05.2017.
2. அரசாணை எண்:172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நவ4(3) நாள்:13.10.2017.
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை-2 அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க.எண்:13193/2017/LA2 நாள்:30.10.2017, 31.10.2017, 07.11.2017, 17.11.2017, 20.12.2017.
4. மனுதாரர் திரு.SP.முருகப்பன் அவர்களின் online விண்ணப்பம் நாள்:07.10.2017.

******

உத்தரவு:

பார்வை 1 மற்றும் 2-இல் கண்ட அரசாணையின்படியும் பார்வை 3-இல் கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படியும், பார்வை 4-இல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம்/ஊராட்சி ஒன்றியம், அரசம்பட்டி ஊராட்சி, திருமயம் கிராமம், சர்வே எண்:64/1A1,1B1-இல் 36700.00சமீ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள (சுப்பு கார்டன்) அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **ம.வ.வ.மு/ந.ஊ.து.இ(சி.ம)எண்:739/2018** என எண்ணிட்டு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பு | : | 36700.00சமீ (9.065 ஏக்கர்) |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : | 62 |
| விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | : | 100 |
| விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு | : | 17241.55சமீ |
| திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு | : | 1981.00சமீ (11.48%) |

செலுத்தப்பட வேண்டிய கட்டண விபரம்:

1) பரிசீலனை கட்டணம்:

| | |
|---|---|
| இணையதளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500/- வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விபரம் | 90-மனைகளுக்கு ரூ.45000/- இணையதளம் வாயிலாக செலுத்தப்பட்டுள்ளது. |

பரிசீலனைக் கட்டணம் செலுத்தப்படாத இதர மனைகளுக்கு, அக்கட்டணத்தை இணையதளம் வாயிலாக சம்பந்தப்பட்ட உரிமையாளர் செலுத்த வேண்டும்.

2) வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம்:

மேற்காண் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணைய தளம் வாயிலாகவும் அல்லது கீழ்க்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

அ) வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத் தலைப்பு:

| | |
|---|---|
| 0217-Urban Development-60-Other Urban Development Scheme -800, Other Receipts AT Receipts Under Regularisation charges of Unapproved Layouts and Plots - DTCP (DPC:0217-60-800-AT-0007) | சதுர மீட்டருக்கு ரூபாய் 30/- வீதம் சலான் மூலம் அரசு கருவூலகத்தில் செலுத்தப்பட வேண்டும். |

ஆ) வளர்ச்சிக் கட்டணம் கீழ்க்காண் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தலாம். அதனை உள்ளாட்சியின் தனிக்கணக்கில் பராமரிக்க வேண்டும்.

சதுர மீட்டருக்கு ரூபாய் 25/- வீதம் சலான் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தப்பட வேண்டும்.

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்மந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்மந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக்கொள்ளலாம்.

பார்வை 1 மற்றும் 2-இல் சுட்டிய அரசாணைகளின்படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நிபந்தனைகள்:

1. அரசாணை (நிலை)எண்:172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்:13.10.2017-இல் விதி எண்:7(g)(ii)-இன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ)
சிவகங்கை மண்டலம், சிவகங்கை.

இணைப்பு:
மனைப்பிரிவு வரைபடம் -2 நகல்கள்.

பெறுநர்
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
திருமயம் ஊராட்சி ஒன்றியம்,
புதுக்கோட்டை மாவட்டம்.

நகல்:
1. ஊராட்சிகளின் உதவி இயக்குநர்.
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
புதுக்கோட்டை மாவட்டம்.
(உத்தரவு நகல் மட்டும்)

2. உதவி இயக்குநர்,
நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை,
புதுக்கோட்டை மாவட்டம்.
(உத்தரவு கடிதம் மற்றும் வரைபடம் ஒரு தொகுப்பு)

3. சார்பதிவாளர்,
திருமயம்,
புதுக்கோட்டை மாவட்டம்.
(உத்தரவு கடிதம் மற்றும் வரைபடம் ஒரு தொகுப்பு)

4. மனுதாரர்
திரு.SP. முருகப்பன்,
T.S.NO:1007, வடக்கு 3வது வீதி,
புதுக்கோட்டை,
புதுக்கோட்டை மாவட்டம் - 622 001.

5. வைப்பறை (உத்தரவு கடிதம் மற்றும் வரைபடம் ஒரு தொகுப்பு).

**திருமயம் ஊராட்சி ஒன்றியம் வட்டார வளர்ச்சி அலுவலரின் (கி.ஊ) செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர் : திரு.ஆர்.சங்கர்.,**

ந.க.தி3/3007/2018 நாள்: 07.01.2021.

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவுகள், மனைகள் வரன்முறைப்படுத்துதல் - திருமயம் ஊராட்சி ஒன்றியம் - அரசம்பட்டி ஊராட்சி - அரசம்பட்டி கிராமம் - சுப்பு கார்டன் நகர் - திரு.SP.முருகப்பன் - சர்வே எண்: 64/1A1, 1B1 -இல் 36700.00 ச.மீ பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு - விற்பனை செய்யப்படாத மனைப்பிரிவு - வரன்முறைப்படுத்துதல்- கொள்கை அளவில் ஒப்புதல் பெறப்பட்டது - வரைபட அனுமதி வழங்கி உத்தரவிடல்.

பார்வை: 1.அரசாணை( நிலை ) எண்.78 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை (ந.வ.து (3) நாள்:04.05.2017.

2.அரசாணை (நிலை) எண்.172 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை (ந.வ.து(3) நாள்:13.10.2017.

3.மனுதாரர் திரு. SP.முருகப்பன் என்பவரது Online விண்ணப்பம், நாள்:07.10.2017.

4.நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் (பொ) சிவகங்கை அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.2343/2017/சி.ம-3 நாள்:03.10.2018.

5.பூங்கா, தானப்பத்திரம் ஆவண எண்.2194/25.10.2018

6. அரசம்பட்டி கிராம ஊராட்சி தீர்மான எண்:

7. வரைபட அனுமதி எண்: ம.வ.வமு/ந.ஊது இ(சிம) எண்:

SPFW/SR NO: 739/2018

*****

உத்தரவு:

திருமயம் ஊராட்சி ஒன்றியம், அரசம்பட்டி ஊராட்சி, அரசம்பட்டி கிராமம், சுப்பு கார்டன் நகர் , சர்வே எண்: 64/1A1, 1B1 -இல் 36700.00 ச.மீ மொத்த பரப்பளவில் பார்வை (3) ல் காணும் மனுதாரர் திரு. SP.முருகப்பன் என்பவரது மனைப்பிரிவுக்கு சிவகங்கை நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநரால் மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி பார்வை (4)ல் காணும் நடவடிக்கைகளில் கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் (In principle approval) வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி உத்தரவில் தெரிவிக்கப்பட்டவாறு விண்ணப்பதாரர் கீழ்கண்ட விபரங்கள் சமர்ப்பித்துள்ளார்.

கிழமேல் நீளம் வடபுரம் 111.0 மீட்டர் தென்புரம் 110.885 மீட்டர் தென்வடல் அகலம் கீழ்புரம் 17.99 மீட்டர் மேல்புரம்" 14.80 மீட்டருக்கு 1818.90 சதுர மீட்டர் அளவுள்ள பூங்காவிற்கான மனையிடம்.

1.பூங்காவிற்கான 10% இடம் ஊராட்சிக்குத் தானமாக வழங்கியுள்ளார் (சார்பதிவாளர் திருமயம் ஆவண எண் 2194/25.10.2018)

2.சாலைக்கான அசல் ஆவணப்பத்திரம் ஏற்கனவே அரசம்பட்டி ஊராட்சியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.சாலைக்கான ஆவணப்பத்திரம் 3686/08.10.2020-ன் படி பொதுப்பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது.

3.வரன்முறைக்கட்டணம் ஒரு மனைக்கு ஒரு சதுர மீட்டருக்கு ரூ.30/- வீதம் 100 மனைகளுக்கு ரூ.457817/-(ரூபாய் நான்கு இலட்சத்து ஐம்பத்து ஏழாயிரத்து எண்ணூற்று பதினேழு மட்டும்) திருமயம் சார்நிலைக் கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது. (செலுத்திய நாள்:31.12.2020)

4. அரசம்பட்டி ஊராட்சி தனிக்கணக்கில் ஒரு மனைக்கு ஒரு சதுர மீட்டருக்கு ரூ.25/- வீதம் 100 மனைகளுக்கு தொகை ரூ.381514/-(ரூபாய் மூன்று இலட்சத்து எண்பத்து ஒன்றாயிரத்து ஐந்நூற்று பதினான்கு மட்டும்) செலுத்தப்பட்டுள்ளது. (செலுத்திய நாள்:05.01.2020)

5.இம்மனைப்பிரிவுகளுக்கு வரைபட அனுமதி வழங்கிட ஒப்புதல் அளித்து அரசம்பட்டி ஊராட்சியில் சாதாரண கூட்டத்தில் தீர்மான எண்:309, நாள்: 31.12.2020-ன் படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எனவே, அரசம்பட்டி கிராம ஊராட்சி அரசம்பட்டி கிராமம் புல எண். 64/1A1, 1B1 -இல் 36700.00 ச.மீ -ல் உள்ள சுப்பு கார்டன் நகரில் விற்கப்படாத மனையின் பரப்பளவு 17241.55 ச.மீ - ல் பூங்கா மற்றும் சாலையிடம் நீங்கலாக மீதமுள்ள பரப்பளவான 15260.55 ச.மீ - பரப்பளவில் அமைந்துள்ள பிளாட் எண்கள்: 2, 3, 4, 8, 9, 37, 42, 43, 44, 48, 49, 50, 52, 53, 54, 55, 56, 57, 58, 59, 60, 61, 62, 63, 64, 65, 66, 67, 68, 69, 70, 71, 83, 84, 85, 86, 87, 88, 89, 90, 91, 92, 93, 94, 95, 96, 97, 98, 99, 100, 103, 104, 105, 106, 107, 108, 109, 110, 111, 112, 113, 114, 115, 116, 117, 118, 119, 120, 121, 122, 123, 124, 125, 126, 127, 128, 129, 130, 131, 132, 133, 136, 137, 138, 139, 140, 141, 142, 143, 146, 147, , 154, 155,156, 159, 160, 161, 166, 170, 171 எனும் 100 மனைகளுக்கு மட்டும் மனைப்பிரிவு வரைபட அனுமதி வழங்கியும், மேற்கண்ட மனைகளுக்கு மட்டும் பத்திரப்பதிவு மேற்கொள்ள ஏதுவாக தடையின்மை வழங்கியும் இதன்வழி உத்தரவிடப்படுகிறது.

**நிபந்தனைகள்:**

1. அரசாணை (நிலை) எண்:172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்:13.10.2017-இல் விதி எண்:7(g)(ii)-இன் படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கியதால் அரசுக்கு பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

7.1.21

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
ஊராட்சி ஒன்றியம்,திருமயம்.

07/01/2021

பெறுநர்:
திரு. SP.முருகப்பன்,
TS No:1007, வடக்கு 3 வது வீதி,
புதுக்கோட்டை-622001.

நகல்:
1.நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர்,
நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் அலுவலகம்,
மாவட்ட ஆட்சியரக வளாகம், சிவகங்கை.
2.உதவி இயக்குநர் (ஊராட்சிகள்),புதுக்கோட்டை அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3.சார் பதிவாளர் அலுவலகம்,திருமயம். (மேற்படி அனுமதியின்படி உரிய பதிவுகள் மேற்கொள்ள)
4.தி3 (இருப்புக் கோப்பு)
5. ஊராட்சிமன்றத் தலைவர், அரசம்பட்டி ஊராட்சி (தானப்பத்திர நகலுடன்)